**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.96/2022**

**சாட்சியின் சான்றுரை DW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | சுதர்சனா | வட்டம் | - | |
| த/பெ | - | அனந்தநாதன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

13.11.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி 2 சுதர்சனா: முதல் விசாரணை:

நான் வழக்கில் 2ம் பிரதிவாதி. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். என் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1. 08.01.2003 தேதியில் 1ம் பிரதிவாதி அப்பாதுரை தனக்காகவும் மைனருக்கு கார்டியன் என்ற முறையிலும் சேர்ந்து கார்த்தி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் இணையதள சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.அ.3.
2. 19.02.2003 தேதியில் 1ம் பிரதிவாதி அப்பாதுரை தனக்காகவும் மைனருக்கு கார்டியன் என்ற முறையிலும் சேர்ந்து வள்ளியம்மை என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் இணையதள சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.அ.4
3. 22.07.2004 தேதியில் 1ம் பிரதிவாதி அப்பாதுரையும் அவர் குமாரர் விஜய் ஆனந்த் என்பவரும் சேர்ந்து கார்த்தி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் இணையதள சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.அ.5

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:

1ம் பிரதிவாதி அப்பாதுரை என் தம்பி என்றால் சரிதான். நானும் அவரும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான், ஆனால் நான் தனியாகவும் அவர் தனியாகவும் குடியிருக்கிறோம். இன்று என்னை நீதிமன்றத்திற்கு 1ம் பிரதிவாதி தான் அழைத்து வந்தார் என்றால் என்னை வற்புறுத்தி அழைத்து வந்தார். நான் என்ன படித்து இருக்கிறேன் என்றால் ' M.A., (Tamil), B.Ed., படித்துள்ளேன்.

வழக்கு சொத்துக்கள் வாசா.ஆ.17 பாகப்பிரிவினை பத்திரத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் இன்று தாக்கல் செய்துள்ள 3 கிரையபத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்களும் மேற்படி வா.சா.ஆ.17 பாகப்பிரிவினையில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் இன்று தாக்கல் செய்த 3 பத்திரங்களும் கிரையபத்திரங்களா அல்லது கிரைய அக்ரிமெண்ட் பத்திரங்களா என்றால் கிரையஅக்ரிமெண்ட் பத்திங்கள். கிரையபத்திரத்திற்கும் கிரைய அக்ரிமெண்ட் பத்திரத்திற்கும் எனக்கு வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ.3 முதல் 5 பத்திரங்கள் கிரையபத்திரங்கள் என்றால் சரிதான். அந்த 3 கிரையபத்திரங்களும் 2003 மற்றும் 2004 வருடங்களில் 1ம் பிரதிவாதி மட்டும் எழுதி கொடுத்தாரா அல்லது அவருடன் வேறு யாரும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் 1ம் பிரதிவாதி மட்டும் எழுதி கொடுத்துள்ளார். வா.சாஆ.17 பாகப்பிரிவினை பத்திரம் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 2022ம் வருடம் எழுதப்பட்டது. பாகப்பத்திரத்தில் சொல்லப்படாத சொத்துக்கள் குறித்தும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டு பின்னர் நீக்கப்பட்ட சொத்துக்கள் குறித்தும் நீதிமன்றத்தில் வேறு வழக்கு நிலுவையில் உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு யார் யாருக்கிடையில் நிலுவையில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதிக்கும் மற்றும் மணல்கொல்லை குத்தகைக்கு எடுத்த

நபருக்கும் இடையில் நிலுவையில் உள்ளது, அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி அந்த நபரிடம் கடன்வாங்கி நிலத்தை போக்கியத்திற்கு கொடுத்து அந்த நபர் 1ம் பிரதிவாதி மீதும் மற்ற நபர்கள் மீதும் நிலத்தை கிரையம் பெற வழக்கு தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த போக்கியம் நான் போட்டேனா என்றால் நானும் கையெழுத்து போட்டேன், ஆனால் நான் பணம் வாங்கவில்லை. போக்கியபத்திரத்தில் நானும் 1ம் பிரதிவாதியும் மட்டும் கையொப்பம் போட்டோமா என்றால் ஆமாம். போக்கியப்பத்திரத்தில் வாதி சகுந்தலா கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பில் சாட்சியை தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் கோரப்பட்டதால் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.